இனிமையான குழந்தைகளே! ஆத்ம உணர்வுடையவர் ஆகும்போது தான் ஞானத்தின் தாரணை ஆகும். ஆத்ம உணர்வுடையவராக (அபிமானி) ஆகும் குழந்தைகளுக்குத் தான் தந்தையின் நினைவு இருக்கும்.

கேள்வி: எந்தவொரு தவறின் காரணமாக மனிதர்கள் ஆத்மாவின் (நிர்லேப்) எதுவுமே ஒட்டாது (பாதிக்கப்படாது) என்று கூறி உள்ளார்கள்?

பதில்: மனிதர்கள் ஆத்மாவே பரமாத்மா என்று கூறினார்கள். இதே தவறின் காரணமாக ஆத்மாவில் எதுவுமே ஒட்டுவதில்லை (நிர்லேப்) என்று ஏற்றுக்கொண்டு விட்டார்கள். ஆனால் நிர்லேப் (எதனாலும் பாதிப்படையாதவர்) ஒரேயொரு சிவபாபா ஆவார். அவருக்குத் தான் துக்கம் சுகம், இனிப்பு, கசப்பு போன்ற அனுபவங்கள் எதுவும் இல்லை. ஆத்மாவோ குறிப்பிட்ட இந்த பொருள் புளிப்பாக உள்ளது என்று கூறுவார். தந்தை கூறுகிறார், என் மீது எந்வொரு பொருளின் விளைவும் ஏற்படுவதில்லை. நான் இந்த பதிவுகளிலிருந்து அப்பாற்பட்டு இருக் கிறேன். ஞானக்கடலாக இருக்கிறேன். அதே ஞானத்தை உங்களுக்குக் கூறுகிறேன்.

பாடல்: அதிர்ஷ்டத்தை எழுப்பி வந்துள்ளேன்.......

ஓம்சாந்தி ! இதை யார் கூறினார்? ஆத்மாக்கள் இந்த உறுப்புக்கள் மூலமாக கூறினர். ஆத்மா சாந்த சொரூபமானது. ஆத்மாவாகிய எனக்கு இந்த சரீரம் கிடைக்கும் பொழுது நான் பேசக் கூடியவன் ஆகிறேன். சரீரத்தின் மூலமாக அநேக விதமான கர்மங்கள் செய் கிறேன். முதன் முதலில் இதை நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். மற்ற சத்சங்கங்களில் மனிதர்கள் மனிதர் களுக்குக் கூறுகிறார்கள். தேகதாரிகள் பேசுகிறார்கள் குறிப்பிட்ட இந்த மகாத்மா அமர்ந்துள்ளார் என்று கூறுவார்கள். இங்கு இந்த விஷயங்கள் இல்லை. நாமோ ஆத்மாக்கள் ஆவோம், இது சரீரம் என்ற உறுப்புக்கள் ஆகும் என்பதை நீங்கள் புரிந்திருக் கிறீர்கள். ஆத்மா பரமபிதா பரமாத்மா மூலமாக கேட்டுக் கொண்டு இருக்கிறது. அவருக்கு ஒரேயொரு பெயர் சிவன் என்பது ஆகும். இச்சமயம் கேட்பதற்காக குழந்தைகள் அமர்ந்துள் ளார்கள். யார் கூறுகிறார்? எல்லையில்லாத தந்தை பரமபிதா பரமாத்மா. பரமபிதா பரமாத்மா என்று கூறப்படும் பொழுது புத்தியோகம் மேலே சென்று விடுகிறது. சிவன் என்றால் புள்ளி, ஆத்மாவும் புள்ளி ஆகும். பரமாத்மாவும் புள்ளி ஆவார். ஆனால் அவர் பரமபிதா பரமாத்மா என்று அழைக்கப் படுகிறார். அவர் தந்தை ஆவார் மற்ற ஆத்மாக்கள் குழந்தைகள் ஆவார்கள். நான் ஆத்மா இந்த சரீரம் மூலமாக எனது பரலோகத் தந்தையின் குழந்தையாக ஆகியுள்ளேன், குழந்தைகளாகிய நீங்கள் ஆத்மா உணர்வுடையவர் ஆக வேண்டும். மற்ற எல்லா இடங்களிலும் மனிதர்கள் மனிதர் களுக்காக விளக்குகிறார்கள். ஒரு சிலர்-கீதை பாராயணம் செய்கிறார்கள். அவர்கள் கூட கீதையை நினைவு செய்து கீதையில் பகவான் இன்னின்னவாறு கூறியுள்ளார் என்று கூறுவார் கள். பகவான் சாகாரத்தில் இந்த கீதையைக் கூறி இருந்தார் என்று நினைக்கிறார்கள். ஒரு சிலர் அமர்ந்து வேத சாஸ்திரம் கூறுகிறார்கள். வேதங்களையோ மனிதர்கள் இயற்றி இருக்கிறார்கள். நிராகார் பகவான் வேதம் உருவாக்குவதில்லை. வியாசரோ மனிதர் ஆவார். வியாசரை பரமாத்மா என்று கூறமாட்டார்கள். பரமபிதா பரமாத்மாவோ புள்ளி வடிவமானவர். குழந்தை கள் சாகாரத்தில் இருக்கிறார்கள்.

சாகாரி ரூபம் உள்ளது. தந்தையோ நிராகார் ஆவார்.

தந்தை கூறுகிறார், நானோ ஒருபொழுதும் சிறியது, பெரியதாக ஆவதில்லை. நீங்கள் சிறியவர் பெரியவராக ஆகிறீர்கள். என்னை பரமபிதா என்றே கூறுகிறார்கள். மனிதன் முதலில் பாலகனாக ஆகி பின் பெரியவனாக ஆகி தந்தை ஆகிறான், நானோ என்றைக்குமே தந்தையாகவே இருக்கிறேன் நான் பாலகன் ஆவதில்லை. எனது ஒரே பெயர் சிவன் ஆகும். உங்களுக்கு 84 பெயர்கள் கிடைக்கின்றன. ஏனெனில் 84 பிறவிகள் எடுக்கிறீர்கள். நானாகிய பரமபிதாவோ புள்ளி வடிவமாக உள்ளேன். பூஜைக்காக மட்டுமே பக்தி மார்க்கத்தினர் பெரிய ரூபம் அமைத்து வைத்துள்ளார்கள். எப்படி ஒருவருடைய பெரிய சித்திரம் (சிலை) அமைக் கிறார்கள் அல்லவா? புத்தருடைய மிகப் பெரிய சித்திரம் அமைக்கிறார்கள். இவ்வளவு உயரமான மனிதரோ இருப்பதில்லை. இப்படி மதிப்பு கொடுக் கிறார்கள் மிக உயர்ந்தவராக இருந்தார் என்று கருது கிறார்கள். தந்தையோ உயர்ந்ததிலும் உயர்ந்தவர் ஆவார். பெரியதிலும் பெரியவர் பரமபிதா பரமாத்மா தந்தை அமர்ந்து தனது அறிமுகத்தை அளிக்கிறார், என்னை சிவன் என்று கூறு கிறார்கள். குழந்தைகளுக்கு புரிய வைக்கப்படுகிறது. நாம் நிராகார் சிவபாபாவிற்கு எதிரில் செல்கிறோம் என்று நீங்கள் உணர வேண்டும். என்னை என்றுமே பரமபிதா பரமாத்மா என்றே கூறுவார்கள். மனித சிருஷ்டிக்கு வித்தாக உள்ளேன். பரமாத்மா அமர்ந்து விளக்குகிறார், ஆத்மாவிற்குத் தான் ஞானம் உள்ளது. பாடவும் செய்கிறார்கள் பரமபிதா பரமாத்மா அவர் ஞானத்தின் கடல் ஆவார். நமக்கு ஞானம் கூறிக்கொண்டிருக்கிறார். முதன் முதலில் ஆத்ம அபிமானி ஆக வேண்டும். தேக அபிமானி ஆகக் கூடாது. ஆனால் நாடகப் படி நீங்கள் அனைவரும் தேக அபிமானி ஆகவே வேண்டியுள்ளது. இப்பொழுது மீண்டும் தந்தை ஆத்ம அபிமானியாக ஆக்குகிறார்.

நீங்கள் அனைவரும் குழந்தைகள் ஆவீர்கள். இவரும் குழந்தை ஆவார். ஆத்மா பரமபிதா பரமாத்மா பாட்டனாரிடமிருந்து ஆஸ்தி பெறுகிறது. லௌகீக சம்மந்தத்தில் புத்திரர் களுக்கு மட்டுமே ஆஸ்தி கிடைக்கிறது. கன்னிகைகளுக்கு கிடைப்பதில்லை. எல்லை யில்லாத தந்தை கூறுகிறார், நீங்கள் அனைவரும் ஆத்மாக்கள் ஆவீர்கள் உங்கள் ஒவ்வொரு வருக்கும் உரிமை உள்ளது. பரமபிதா பரமாத்மாவாகிய என்னுடையவராக நீங்கள் இருந்தீர்கள் மற்றும் இருக்கிறீர் கள். ஓ காட் ஃபாதர், ஓ, பரமபிதா பரமாத்மா! என்று கூறுகிறார்கள் அல்லவா? மகிமை செய்கிறார் கள் யார் செய்வது? ஆத்மா. அந்த லௌகீக ஃபாதர் தந்தையோ சரீரத்தினுடையவர் ஆவார். இவர் ஆத்மாக்களின் தந்தை ஆவார். ஓ, பரமபிதா பரமாத்மா என்று ஆத்மா அழைக்கிறது. அவினாசி தந்தையை நினைவு செய்து கொண்டே வந்துள்ளார் கள். ஏனெனில் இராவண இராஜ்யத்தில் துக்கமே துக்கமாக உள்ளது. இராவண இராஜ்யம் ஆரம்பம் ஆனது முதல் நினைவு செய்வது ஆரம்பமாகிறது, நினைவோ தந்தையைத்தான் செய்ய வேண்டி யுள்ளது. ஏனெனில் ஆஸ்தி தந்தையிடமிருந்து தான் கிடைக்கிறது. இங்கோ மனிதர்களுக்கு அநேகரின் நினைவு இருக்கிறது. குருமார்கள் அந்த ஒருவரின் (பாபா) நினைவை மறக்க வைத்து விடுகின்றனர். சர்வவியாபியாக இருக்கிறார் என்றால் காட் அல்லது ஃபாதர் என்று யாருக்கு கூறுவது? தந்தை அடிக்கடி கூறுகிறார் - குழந்தைகளே! ஆத்ம அபிமானி ஆகுங்கள். எழுந்தாலும் அமர்ந்தாலும் தந்தையாகிய என்னை

நினைவு செய்யுங்கள். நாம் ஸ்ரீமத்படி நடந்து கொண்டிருக்கிறோம் என்று உணருங்கள். நான் ஆத்மா பாபாவின் நினைவில் உணவு உட்கொண்டு இருக்கிறேன். நினைவின் மூலமாக விகர்மங்கள் விநாசம் ஆகும். குறிக்கோள் மிகவும் உயர்ந்தது ஆகும். யோகம் ஒன்றும் அவ்வளவு எளிதானது அல்ல. ஆனால் தந்தையின் பெயரை மறக்கச் செய்து விட்டார்கள், ஸ்ரீ கிருஷ்ணரோ குழந்தை ஆவார். இவ்வளவு பெரிய பிராலப்தம் (பலன்) அவசியம் தந்தை தான் அளித்துள்ளார்.

தேகத்துடன் சேர்த்து தேகத்தின் அனைத்து தர்மங்களையும் மறந்து விடுங்கள் என்று தந்தை புரிய வைக்கிறார். இந்த பெயர்களோ எல்லாமே பின்னால் வைக்கப்பட்டவை ஆகும். எனவே பரமபிதா பரமாத்மா மூலமாக நாம் இந்த ஞானத்தை படித்துக் கொண்டி ருக்கிறோம் என்பதை உணர வேண்டும். நாம் ஆத்மாக்கள் என்று புரிய வைக்கக் கூடிய வேறு எந்த பள்ளிக்கூடமும் இல்லை. முதலில் சதோபிரதானமாக இருந்தோம், பிறகு சதோ ரஜோ தமோவில் வருகிறோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள் ஆத்மாவில் துரு படிகிறது. எனக்குள்ளேயோ ஒருபொழுதும் துரு படிவதில்லை, நான் என்றைக்குமே உண்மையான தங்கமாக உள்ளேன். உங்களுடைய ஆத்மாக்கள் எல்லோருமே இச்சமயம் இரும்பு யுகத்தினுடையதாக ஆகியுள்ளது. மம்மா கூட கூறுவார், நான் சிவபாபாவிடம் என்ன கேட்டேனோ அதையே தான் கூறுகிறேன். சிவபாபாவோ சுயம் ஞானத்தின் கடல் ஆவார். இது மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஆகும். உண்மையில் நாம் பாபாவினுடையவர் ஆகி உள்ளோம் அவர் நமக்கு கற்பிக்கிறார். பாபா மூலமாக நாம் ஜீவன் முக்தி அடைகிறோம். ஜீவன் முக்த் என்றால் இந்த சரீரத்தில் வரத்தான் வேண்டும், ஆனால் சுகம் அனுபவிக்கவும் வேண்டும். முக்தி அனைவருக்கும் கிடைக்கிறது. ஆனால் ஜீவன் முக்தியிலோ நம்பர் பிரகாரம் வருகிறார்கள். முக்தியோ அனைத்து ஆத்மாக் களும் அடைவார்கள். துக்கத்திலிருந்து அரைக்கல்பத்திற்கு விடுவித்து விடுகிறார். பாபா கூறு கிறார், உங்களை -பரேட் செய்து ஜீவன் முக்தி அளிக்கிறேன். பிறகு ஒருவர் எத்தனை பிறவிகளோ மற்றொருவர் எத்தனை பிறவிகளோ எடுக்கிறார்கள். ஜீவன் முக்தியை எல்லோரும் அடை கிறார்கள். சத்கதி தாதா ஒரேயொருவர் ஆவார். யாரெல்லாம் தர்மஸ்தாபகர்களோ அனைவரும் புனர்ஜென்மம் எடுத்து எடுத்து இப்பொழுது தமோபிரதானம் ஆகியுள்ளனர். நான் வந்து அனைவரையும் இந்த துக்கங்களிலிருந்து விடுவிக்கிறேன். எனவே என்னை - பரேட்டர் என்று கூறுகிறார்கள். முக்தி, ஜீவன் முக்தி அளிக்கும் வள்ளல் என்று கூறுகிறார்கள். முக்தி என்றால் நமது வீடான சாந்தி தாமத்திற்குச் செல்வது. தந்தை கூட பரந்தாமத்திலிருந்து வருகிறார். அது பரலோகம் என்று கூறப்படுகிறது. நீங்கள் நிர்வாணதாமம் மற்றும் சுகதாமம் இரண்ûடையும் நினைவு செய்கிறீர்கள். சொர்க்கம் மற்றும் நரகம் இங்கேயே தான் ஆகிறது. இச்சமயம் இது நரகமாகும் என்று எல்லோரும் அறிந்துள்ளார்கள் எவ்வளவு துக்கம் அடைந்து கொண்டே இருக்கிறார்கள். கருட புராணத்திலோ மனிதர்களுக்கு பயம் ஏற்படும் வகையில் பாவ கர்மங்களிலிருந்து தப்பித்து இருக்க வேண்டும் என்பதற்காக மிகவும் சுவாரசியமான விஷயங்களை எழுதி விட்டுள்ளார்கள். துவாபர யுகத்திலிருந்து சாஸ்திரம் எழுத ஆரம்பிக்கிறார்கள். தந்தை கூறுகிறார்: நான் வந்து பிரம்மா மூலமாக பிராமண தர்மத்தைப் படைக்கிறேன். அவர்கள் பின் சூரியவம்சத்தினர், சந்திரவம்சத்தினர் ஆகிறார்கள். இரண்டு யுகங்களில் எந்தவொரு தர்மத்தை ஸ்தாபனை

செய்பவரும் வருவ தில்லை, பிறகு ஒருவருக்குப் பின்னால் ஒருவர் எல்லோரும் நம்பர் பிரகாரம் வருகிறார்கள் மற்றும் அவரவர் தர்மங்களை அறிந்திருக்கிறார்கள். இந்த தேவி தேவதா தர்மம் மறைந்து விடும் பின் தங்களை தேவதை என்று அழைத்துக் கொள்ள முடியாமல் இருப்பார்கள். தூய்மை யற்றவர்கள் எப்படி ஸ்ரீ அல்லது சிரேஷ்டமானவர்கள் என்று கூறப்படுவார்கள்? தந்தை தான் சிரேஷ்டமானவராக உருவாக்குகிறார். தேவி தேவதைகள் சிரேஷ்டமானவர்கள் என்று கூறப் படுகிறார்கள். அவர்களுடைய படங்களும் உள்ளன. ஆனால் தேவி தேவதா தர்மம் எப்பொழுது இருந்தது, யார் ஸ்தாபனை செய்தார்கள் என்பது புரியாமல் இருக் கிறார்கள். சத்யுகத்தின் ஆயுளையே நீண்டதாக செய்து விட்டார்கள்.

இப்பொழுது பாபா கூறுகிறார் - குழந்தைகளே! உங்களை ஆத்மா என்று உணருங்கள். தந்தையை நினைவு செய்யுங்கள். இப்பொழுது நாடகம் முடிவடைகிறது. இப்பொழுது முக்தி, ஜீவன் முக்தியின் வாசல்கள் திறந்து கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் பார்க்க வில்லையா? முக்தி, ஜீவன் முக்தி தாதாவோ ஒரே ஒருவர் தான் ஆவார். இங்கோ பாருங்கள் ஜெகத் மாதா என்ற பட்டத்தைக் கூட ஒரு சிலருக்கு அளித்துக் கொண்டே இருக்கிறார்கள். உண்மையில் ஜெகதாம்பா இவர் அல்லவா? ஜெகத்பிதாவாகவும் ஆசிரியராகவும் ஜெகத் குருவாகவும் இருப்பவர் இவர்போல (சிவபாபா) வேறு யாராகவும் இருக்க முடியாது. மனிதர்கள் தங்கள் மீது இதுபோல நிறைய பேர் வைத்துக் கொண்டாலும் கூட சரி, ஆனால் அவ்வாறு இல்லை. அந்த இலட்சுமி நாராயணர் எங்கே? இங்கே இந்த விகாரி கூட தங்கள் மீது அந்த பட்டத்தை வைத்துக் கொள்கிறார்கள். மனிதர்கள் எவ்வளவு முட்டாள் ஆகி விட்டுள்ளார்கள்! ஆதி சனாதன தேவி தேவதா தர்மத்தை மறந்து அவர்களது பட்டத்தை பின் தங்களுக்கே கொடுத்துக் கொள்கிறார்கள். உண்மையில் உயர்ந்ததிலும் உயர்ந்த பதவி ஒரே ஒருவருடையது ஆகும். சத்கதி தாதா ஒரேயொருவர் ஆவார். இராம் என்று கூறினாலும் கூட அதுவும் ஒரேயொரு நிராகாராக இருப்பவரைத் தான் குறிக்கும்.

பாரதவாசிகளுக்கு தங்களது தர்மத்தை யார் மற்றும் எப்பொழுது ஸ்தாபனை செய்தார்? என்பது தெரியாது என்று தந்தை கூறுகிறார். ஒருவர் ஏதோ ஒரு தேவியை நினைவு செய்கிறார், ஒருவர் கிருஷ்ணரை, ஒருவர் குருவை நினைவு செய்கிறார்கள். குருவின் படத்தைக் கூட மாட்டி வைக்கிறார்கள். உங்களுக்கு படங்களுடன் வேலை இல்லை. யாருக்கு சித்திரம் (சரீரம்) இல்லையோ அவர் விசித்திரமானவர். ஆத்மா விசித்திரமாக உள்ளது. எப்படி தந்தை விசித்திர மாக உள்ளோரோ அவ்வாறே குழந்தைகளும் விசித்திரம் ஆவார்கள். ஆத்மா தான் கேட்கிறது. பாபா இந்த சரீரத்தை கடனாக எடுத்துள்ளார். இயற்கையின் ஆதாரமின்றி நான் எப்படி ஞானம் அளிப்பேன் என்று கூறுகிறார். இராஜயோகம் எப்படி கற்பிப்பேன்? பகவான் என்று நிராகருக்குத் தான் கூறப்படுகிறது. அவர் தூய்மை இல்லாத உலகத்தில் வர வேண்டியே உள்ளது. கிருஷ்ணரை கடலில் ஆல இலையில் வந்தார் என்று காண்பிக் கிறார்கள். அந்த மாதிரி எந்த விஷயமும் கிடையாது. கிருஷ்ணரோ உலகத்தின் முதல் இளவரசர் ஆவார். அங்கு வேறு எந்த தர்மமும் இல்லை. அத்வைத இராஜ்யம் ஆகும். பிறகு பிரிவினை ஏற்பட்டு விடுகிறது. பின்னர் அநேகவிதமான தர்மங்கள் ஸ்தாபனை ஆகிக் கொண்டே போகின்றன. எனவே பாபா இந்த சரீரத்தில் வந்து நமக்கு

படிப்பிக்கிறார் என்பதைக் குழந்தைகள் புரிந்து கொள்ள வேண்டும். பாபா கூறுகிறார் நான் அசரீரியாக உள்ளேன். இந்த சரீரம் மூலமாக உங்களுக்கு ஞானம் அளிக்கிறேன். நான் ஞானக்கடல் ஆவேன். இந்த எல்லா விஷயங்களையுமே தந்தை வந்து விளக்குகிறார். இறைவன் அல்லது பரமாத்மா என்று மட்டும் கூறுவதால் தந்தையின் சம்மந்தம் மறந்து விடுகிறது. பரமாத்மா தந்தை ஆவார். அவரிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது இதை மறந்து விடுகிறார்கள். அவர் நமது தந்தை ஆவார், படைப்பு கர்த்தா ஆவார். நாம் அவரது படைப்பு ஆவோம். அவர் படைத்துள்ளார், யாராவது ஒருவர் படைப்புக் கர்த்தாவாக இருப்பார் அல்லவா? ஆண்கள் எல்லைக்குட்பட்ட பிரம்மா ஆவார்கள் என்று பாபா விளக்கியுள்ளார். குழந்தை களைப் படைக்கிறார்கள். முதலில் ஒரு பெண்ணை சுவீகாரம் செய்கிறார்கள். பின் அவர் மூலமாக குழந்தைகளைப் படைக்கிறார்கள். பாபாவும் கூறுகிறார், நான் இவர் மூலமாக படைக்கிறேன் ஸ்திரியோ அவசியம் வேண்டும் அல்லவா! பாபாவிற்குக் கூறுவதே தந்தையும் நீயே! தாயும் நீயே! என்று எனவே இவர் மூலமாக குழந்தைகளை சுவீகாரம் செய்கிறார். இவர் மாதா ஆகிவிட்டார். இவர் மூலமாக சுவீகாரம் செய்கிறார். எனவே உங்களை பிரம்மா முக வம்சாவளி என்று கூறுவார்கள். நீங்கள் இவர் மூலமாக தந்தையினுடையவர் ஆகியுள்ளீர்கள். இது மிகவும் அதிசயமான விஷயங்கள் ஆகும். சாஸ்திரங்களில் இவை இல்லை. எனக்கு ஞானம் நிறைந்தவர், அனைத்தும் அறிந்தவர் என்று கூறுகிறார்கள். பரமாத்மா அனைவருடைய மனதிற்குள் இருக்கும் விஷயங்களை அறிவார், தாட் ரீடர் என்று மனிதர்கள் கருதுகிறார்கள். ஆனால் இத்தனை பேர் எல்லோருக்குமாக தாட் ரீடர் எவ்வாறு மனதின் எண்ணங்களை அறிய முடியும் நான் மனித சிருஷ்டியின் பீஜ் ரூபம் (விதை) ஆவேன் என்று தந்தை கூறுகிறார். நான் சைத்தன்யம் (உயிர்ப் பொருள்) ஆவேன் சத்தியம் (அழியாதவன்) ஆவேன். ஆத்மா கூட சைத்தன்யமானது சரீரம் அசத்தியமானது. அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கிறது. ஆத்மாவோ இறப்பதில்லை. ஆத்மா இந்த ஞானத்தை கிரஹிக்கிறது.

நானாகிய பரமபிதா பரமாத்மா நிர்லேப் ஆவேன் (எதனாலும் பாதிக்கப்படுவதில்லை) என்று தந்தை புரிய வைக்கின்றார். அதாவது துக்கம் சுகம் அல்லது கசப்பு-இனிப்பான பொருள் ஆகியவற்றின் பாதிப்பு எனக்குள் ஏற்படுவதில்லை. நான் இந்த பாதிப்புகளிலிருந்து விடுபட்டு நிர்லேப் (எதுவும் பாதிக்காதவனாக) இருக்கிறேன். ஞானத்தின் கடல் ஆவேன். மனிதர்கள் பின் ஆத்மா நிர்லேப் என்று கூறுகிறார்கள். ஏனெனில் ஆத்மாவே பரமாத்மா இரண்டும் ஒன்று தான் என்பார்கள், ஒருவர் கூறினார் என்றால் அவ்வளவு தான் அவருக்கு பின்னால் பின்பற்றிக் கொண்டே இருப்பார்கள். நான் நிர்லேப் ஆவேன் என்று தந்தை கூறுகிறார். எனக்கு ஒன்றும் புளிப்பு உவர்ப்பு என்ற சுவை இல்லை. இது இவரது (பிரம்மா) ஆத்மா கூறுகிறது - குறிப்பிட்ட இந்த பொருள் புளிப்பாக உள்ளது என்று. எனக்குள் முழு சிருஷ்டியின் ஞானம் உள்ளது. அதை ஆத்மாக்களுக்குப் படிப்பிக் கிறேன். நான் ஆத்மா பரமபிதா பரமாத்மா மூலமாக கேட்டுக் கொண்டிருக்கிறேன் என்று நீங்கள் ஒவ்வொருவரும் உணர வேண்டும். இங்கோ உண்மை யிலேயே பகவான் கூறுகிறார். இறைவன் படைப்புக் கர்த்தா ஒருவர் ஆவார் என்று நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். முதன் முதல் முக்கியமான விஷயமே பாரதத் தினுடையது. பாரதம் அழிவில்லாத கண்டம் என்று கூறப்படுகிறது. இந்த பாரதம் பதீத பாவன தந்தையின் ஜென்ம பூமி ஆகும்.

இது மிகவும் உயர்ந்த கண்டமாகும். இங்கு இலட்சுமி நாராயணரின் இராஜ்யம் இருக்கும். தந்தை மீண்டும் தேவி தேவதா தர்மத்தின் நாற்று நட்டுக் கொண்டி ருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். யார் இந்த தர்மத்தைச் சேர்ந்தவர்களோ அவர்களே வந்து ஆஸ்தி எடுப்பார்கள். இதற்கு நாற்று நடப்படுவது என்று கூறப்படுகிறது. ஆத்ம அபிமானி ஆக வேண்டும் என்று பாபா விளக்கினார். பாபா நமக்கு படிப்பித்துக் கொண்டிருக்கிறார். நாம் இந்த காது கள் மூலமாகக் கேட்கிறோம். படிக்கிறோம், படிப்பிக்கிறோம். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய், தந்தை மற்றும் பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) சித்திரத்தை (சரீரத்தை) மறந்து விசித்திரமாகி (அசரீரியாகி) விசித்திர (சரீரமற்ற) தந்தையை நினைவு செய்ய வேண்டும். தேகத்துடன் சேர்த்து தேகத்தின் அனைத்து தர்மங்களையும் புத்தி மூலமாக மறக்க வேண்டும். ஆத்ம அபிமானியாக இருக்கும் அப்பியாசம் செய்ய வேண்டும்.

(2) தேவி தேவதா தர்மத்தின் நாற்று நடப்பட்டுக் கொண்டிருக்கிறது, எனவே அவசியம் தூய்மையாக வேண்டும். தெய்வீகக் குணங்களை தாரணை செய்ய வேண்டும்.

வரதானம் : அலௌகிக வாழ்க்கையின் ஸ்மிருதி மூலம் விருத்தி, ஸ்மிருதி மற்றும் திருஷ்டியை மாற்றக்கூடிய மர்ஜீவா ஆகுக.

பிராமண வாழ்க்கையை ஓர் அலௌகிக வாழ்க்கை எனச் சொல்கிறார்கள். அலௌகிகம் என்பதன் அர்த்தம், இந்த உலகத்தைப் போன்றதில்லை. திருஷ்டி, ஸ்மிருதி மற்றும் விருத்தி (உள்ளுணர்வு) அனைத்திலும் மாற்றம் இருக்க வேண்டும். சதா ஆத்மா சகோதர-சகோதரன் என்ற உள்ளுணர்வு மற்றும் சகோதர-சகோதரி என்ற உள்ளுணர்வு இருக்க வேண்டும். நாம் அனைவரும் நமக்குள் ஒரு பரிவாரத்தைச் சேர்ந்தவர்கள் - இந்த உள்ளுணர்வு இருக்க வேண்டும். திருஷ்டி மூலம் கூட ஆத்மாவைப் பாருங்கள், சரீரத்தைப் பார்க்காதீர்கள். அப்போது மறுபிறவி (மர்ஜீவா) எனச் சொல்வார்கள். அத்தகைய சிரேஷ்ட வாழ்க்கை கிடைத்துள்ள தென்றால் பழைய வாழ்க்கையின் நினைவு வர முடியாது.

சுலோகன்: சதா சுத்த உணர்வில் (ஃபீலிங்) இருப்பீர்களானால் அசுத்த உணர்வு என்ற ஃப்ளூ அருகில் கூட வர முடியாது.